## CHAPTER I - PRELIMINARY

## இயல் I — முன்னுரை

**SECTION 1. SHORT TITLE, EXTENT AND COMMENCEMENT :**

1. This Act may be called the Factories Act, 1948.

2. It extends to the whole of India.

3. It shall come into force on the 1st day of April, 1949.

**பிரிவு : 1. குறுந்தலைப்பு, எல்லைவரம்பு மற்றும் தொடக்கம்:**

1. இந்த சட்டம் **தொழிற்சாலைகள் சட்டம், 1948** என அழைக்கப்படலாம்.

2. இதன் எல்லை வரம்பு இந்தியா முழுவதும் உண்டு.

3. இந்த சட்டம் 1949ம் வருடம் ஏப்ரல் மாதம் 1ம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.

### COMMENTARY

The Factories Act was first enacted in 1881 in order to regulate working conditions in factories. Since then, the Act underwent many amendments and the present Factories Act 1948 came into force in April 1949.

The object of the Act is to protect the workmen from unduly long hours of manual and physical work. It provides rules for healthy and sanitary working conditions.

Further, in all manufacturing processes, it provides for precautions for the safety of the workmen and also for the prevention of accidents.

The main object of the Act is to protect the workers employed in factories against industrial and occupational risks. The Act imposes upon the owners/occupiers with obligations to protect the workers against industrial risks and secure the workers suitable conditions conducive to protect their health and safety.

The Act, therefore, provides certain minimum requirements regarding health, safety and welfare of workers. The Act also prescribed special conditions for employment of women and the children. Further, the Act regulates the working hours and annual wages with leave, etc., of workmen.

Thus the Act is a beneficial piece of legislation aimed to achieve social reforms to workers working in factories.

## விளக்கவுரை

தொழிற்சாலைகள் சட்டம் 1881 ம் வருடம் முதன்முதலில் இயற்றப்பட்டது. இது தொழிற்சாலைகளில் பணி நிபந்தனைகளை முறைப்படுத்துவதற்காக இயற்றப்பட்டது. இச்சட்டம் இயற்றிய நாளிலிருந்து, பல திருத்தங்களுக்கு உள்ளானது. தற்போதைய தொழிற்சாலை சட்டம் 1948 ஆனது, 1949 ம் வருடம் ஏப்ரல் மாதம் நடைமுறைக்கு வந்தது.

தொழிலாளர்கள் மிக நீண்ட நேரத்திற்கு உடல் உழைப்பை செய்வதிலிருந்து, அவர்களை பாதுகாப்பது தான் இந்த சட்டத்தின்



முக்கிய நோக்கமாகும். மற்றும் நலம் மற்றும் துப்புரவு வசதிகளுக்கான விதிகளை இச்சட்டம் வகுக்கிறது.

மேலும், அனைத்து தயாரிப்பு செயல்முறைகளிலும், தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் விபத்துக்களை தடுப்பதற்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கூறுகிறது.

தொழில் வேலைகளில் ஏற்படும் இடையூறுகளுகளிலிருந்து தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களை பாதுகாப்பது தான் இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இச்சட்டம் உரிமையாளர்கள் மற்றும் சட்ட உரிமை பற்றுடமையர்கள் மீது கடப்பாடுகளை விதிக்கிறது. தொழில் இடையூறுகளிலிருந்து தொழிலாளர்களை பாதுகாக்கவும், அவர்கள் தங்களது நலன் மற்றும் பாதுகாப்பை காத்துக்கொள்வதற்கு போதுமான சூழ்நிலைகளை உருவாக்க இந்த கடப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

ஆகவே இந்த சட்டம் தொழிலாளர்களின் நலன் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த சில குறைந்தபட்ச தேவைப்பாடுகளை வழங்குகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளை வேலைக்கமர்த்துவதற்கு சில சிறப்பு நிபந்தனைகளையும் இந்த சட்டம் வகுத்துரைத்தது.

மேலும், தொழிலாளர்களின் பணி நேரங்கள் மற்றும் விடுமுறையுடன் கூடிய ஆண்டு வருமானம் போன்றவற்றை இந்த சட்டம் முறைப்படுத்துகிறது.

இவ்வாறு இந்த சட்டம் ஒரு பயனளிக்கக்கூடிய வகையிலான சட்டமாகும். இது தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சமூக சீர்திருத்தங்களை அடைவதற்காக இயற்றப்பட்டது.

**SECTION 2. INTERPRETATION:**

In this Act, unless there is anything repugnant in the subject or context,-

**பிரிவு: 2. பொருள் வினக்கம்:**

கருப்பொருள் அல்லது தருவாயில் முரணாக எதுவும் இருந்தாலன்றி, இச்சட்டத்தில் பின்வரும் பொருள் அடங்கும்.

**(a)** **"Adult"** means a person who has completed his eighteenth year of age;

**(a)** **"உரிமை வயதுடையவர்"** என்றால் தனது 18வது வயதைப் பூர்த்தி செய்த நபர்

**(b)** **"Adolescent"** means a person, who has completed his fifteenth year of age but has not completed his eighteenth year;

**(b)** **"இளம் வயதினர்"** என்றால் தனது 15வது வயதைப் பூர்த்தி செய்த, ஆனால் 18 வயது பூர்த்தியடையாத நபர்

**(bb)** **"Calendar year"** means the period of twelve months beginning with the first day of January in any year;

**(bb)** **"காலண்டர் வருடம்"** என்றால் ஒரு வருடத்தின் ஜனவரி முதல் தேதி தொடங்கி 12 மாதங்கள் முடிவடையும் காலம்

**(c)** **"Child"** means a person who has not completed his fifteenth year of age;



**(c)** **"குழந்தை"** என்றால் தனது 15 வயதைப் பூர்த்தி செய்யாத நபர்;

**(ca)** **"Competent person",** in relation to any provision of this Act, means a person or an institution recognised as such by the Chief Inspector for the purposes of carrying out tests, examinations and inspections required to be done in a factory under the provisions of this Act having regard to-

(i) the qualifications and experience of the person and facilities available at his disposal, or

(ii) the qualifications and experience of the persons employed in such institution and facilities available therein, with regard to the conduct of such tests, examinations and inspections, and more than one person or institution can be recognised as a competent person in relation to a factory;

**(ca)** **"தகுதி வாய்ந்த நபர்"** என்றால் இச்சட்டத்தின் எந்த வகையம் தொடர்பாக தலைமை ஆய்வாளரால் அங்கீகரிக்கப்பட்ட நபர் அல்லது நிறுவனம் ஆகும். இது, பின்வருவன குறித்து இந்த சட்டத்தின் வகையங்களின் கீழ், ஒரு தொழிற்சாலையில் செய்யப்பட வேண்டிய ஆய்வுகள், பரிசோதனைகள், சோதனைகளைச் செய்வதற்காகும்;

(i) நபர் ஒருவரின் தகுதிகள் மற்றும் அனுபவம் மற்றும் அவரிடம் உள்ள வசதிகள் அல்லது,

(ii) அத்தகைய ஆய்வுகள், பரிசோதனைகள், சோதனைகள் நடத்துவது குறித்து அத்தகைய நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்டுள்ள நபர்களின் தகுதிகள் மற்றும் அனுபவம் மற்றும் ஒரு தொழிற்சாலை தொடர்பாக ஒன்றுக்கு மேற்பட்ட நபர் அல்லது நிறுவனம் தகுதி வாய்ந்த நபராக அங்கீகரிக்கப்பட முடியும்.

**(cb) “Hazardous process”** means any process or activity in relation to an industry specified in the ‘First Schedule where, unless special care is taken, raw materials used therein or the intermediate or finished products, bye-products, wastes or effluents thereof would-

(i) cause material impairment to the health of the persons engaged in or connected therewith, or

(ii) result in the pollution of the general environment;

Provided that the State Government may, by notification in the Official Gazette, amend the First Schedule by way of addition, omission or variation of any industry specified in the said Schedule;

**(cb) “அபாயம் தரகூடிய செய்முறை”** என்றால் முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலை தொடர்பான செய்முறை அல்லது நடவடிக்கை ஆகும். சிறப்பு கவனம் மேற்கொள்ளப்பட்டாலன்றி, அதில் பயன்படுத்தப்பட்ட கச்சாப் பொருள் அல்லது இடைநிலை அல்லது முடிக்கப்பட்ட பொருட்கள், துணைப் பொருட்கள், கழிவுகள் அல்லது கழிவுச் சேதங்கள் பின்வருவனவற்றை ஏற்படுத்தும்;

(i) இதில் ஈடுபட்டுள்ள அல்லது தொடர்புடைய நபர்களின் நலனுக்கு முக்கிய பலவீனத்தை ஏற்படுத்தும் அல்லது,

(ii) பொது சுற்றுச்சூழல் மாசில் ஏற்படுத்துதல்.

மாநில அரசாங்கம் அரசிதழில் வெளியிடுவதன் மூலம் கூறப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலையில் கூட்டுதல், விட்டுவிடுதல் அல்லது வேறுபடுத்துதல் மூலம் முதல் அட்டவணையைத் திருத்தலாம்.



**(d)** **“Young person”** means a person, who is either a child or an adolescent;

**(d)** **“இளம் நபர்”** என்றால் குழந்தை அல்லது 15 வயது பூர்த்தியடைந்த நபர்;

**(e)** **“Day”** means a period of twenty-four hours beginning at midnight;

**(e)** **“நாள்”** என்றால் நடுநிசியில் ஆரம்பமாகி முடியும் 24 மணி நேர காலம்;

**(f)** **“Week”** means a period of seven days beginning at midnight on Saturday night or such other night as may be approved in writing for a particular area by the Chief Inspector of Factories;

**(f)** **“வாரம்”** என்றால் சனிக்கிழமை நடுநிசியில் ஆரம்பமாகும் அல்லது தொழிற்சாலைகள் தலைமை ஆய்வாளரால் குறிப்பிட்ட இடவரைக்கு எழுத்து மூலம் ஒப்புதல் செய்யப்படக்கூடிய வேறு இரவாகும்;

**(g)** **“Power”** means electrical energy, or any other form of energy, which is mechanically transmitted and is not generated, by human or animal agency;

**(g)** **“சக்தி”** என்றால் மின்சார சக்தி அல்லது இயந்திரம் மூலம் மாற்றப்பட்ட ஆனால் மனித அல்லது மிருக முகமையினால் உற்பத்தி செய்யப்படாத வேறுவகை சக்தி;

**(h)** **"Prime-mover"** means any engine, motor or other appliance, which generates or otherwise provides power;

**(h)** **"உந்து சக்தி"** என்றால் சக்தி உற்பத்தி செய்யும் அல்லது சக்தி வழங்கும் என்ஜின், மோட்டார் அல்லது இதர துணைக்கருவி;

**(i)** **"Transmission machinery"** means any shift, wheel, drum, pulley, system of pulleys, coupling, clutch, driving belt or other appliance or device by which the motion of a prime-mover is transmitted to or received by any machinery or appliance;

**(i)** **"மாற்றுதல் இயந்திரம்"** என்றால் தூக்கி, சக்கரம், டிரம், இழு சக்கரம், இழு சக்கரங்களின் முறைமை, இணைப்பான், கிளட்ச், செலுத்தும் பெல்ட், அல்லது உந்து சக்தியின் செயல்பாடு மாற்றப்படும் இதர துணைக்கருவி அல்லது இயந்திரம் அல்லது துணைக்கருவியினால் பெறப்படும் வேறு கருவி;

**(j)** **"Machinery"** includes prime-movers, transmission machinery and all other appliances, whereby power is generated, transformed, transmitted or applied;

**(j)** **"இயந்திரம்"** என்றால் உந்து சக்தி, மாற்றுதல் இயந்திரம் மற்றும் இதர துணைக் கருவிகள். இதன் மூலம் சக்தி உருவாக்கப்படுகிறது, மாற்றப்படுகிறது, அனுப்புகை செய்யப்படுகிறது அல்லது செய்முறை சார்பாக்கப்படுகிறது;

**(k)** **"Manufacturing process"** means any process for-

(i) making, altering, repairing, ornamenting, finishing, packing, oiling, washing, cleaning, breaking up, demolishing or otherwise treating or adopting any article or substance with a view to its use, sale, transport, delivery or disposal; or



(ii) pumping oil, water, sewage, or any other substance; or

(iii) generating, transforming or transmitting power; or

(iv) composing types for printing, printing by letter press, lithography, photogravure or other similar process or book-binding; or

(v) constructing, reconstructing,, repairing, refitting, finishing or breaking up ships or vessels; or

(vi) preserving or storing any article in cold storage;

**(k)** **"தயாரிக்கும் செய்முறை"** என்றால் பின்வருவனவற்றிற்கான செய்முறை ஆகும்;

(i) பொருள் அல்லது கருப்பொருளின் பயன்படுத்துவதற்கு, விற்பனை செய்வதற்கு, மாற்றுவதற்கு, ஒப்படைத்தல் அல்லது விடுவிப்பிற்கு அதனைச் செய்தல், மாற்றுதல், பழுதுபார்த்தல், அலங்காரப் பணி செய்தல், முடித்தல், கட்டிவைத்தல், எண்ணெய் விடுதல், கழுவுதல், துடைத்தல், பிரித்தெடுத்தல், அழித்தல் அல்லது அளித்தல் மேற்கொள்ளுதல் ஆகும் அல்லது,

(ii) எண்ணெய், நீர், சாக்கடை அல்லது வேறு பொருட்கூறை வெளியேற்றுதல் அல்லது,

(iii) சக்தியை உற்பத்தி செய்தல், மாற்றுதல் அல்லது அனுப்புகை செய்தல் அல்லது,

(iv) அச்சிடுதலுக்காக வகைகளை அமைத்தல், கடித அச்சு

மூலம் அச்சிடுதல், அச்சடிப்பு முறை, புகைப்பட அச்சடிப்பு அல்லது அதை ஒத்த செய்முறை அல்லது புத்தகம் பைண்டிங் செய்தல் அல்லது,

(v) கப்பல்கள் அல்லது சிறு கப்பல்களைக் கட்டுதல், மறு கட்டுமானம் செய்தல், பழுது பார்த்தல், மறுபடியும் பொருத்துதல், முடித்தல் அல்லது பிரித்தல் அல்லது,

(vi) பனிக் கிட்டங்கியில் பொருள் எதையும் பாதுகாத்தல் அல்லது சேமித்தல்.

### *CASE LAWS*

### வழக்கு விதிகள்

**1. *Qazi Noorul Hasan Hamid Hussain Petrol Pump and another Vs. Deputy Director, E.S.I. Corporation, Kanpur, (2003) II LLJ 341 (All):***

The Court held that the activity of pumping petroleum with the aid of power and by employing more than 10 persons - it constituted 'manufacturing process' under the Factories Act, 1948.

**1. *ஹாசி நூருல் ஹாசன் ஹமிட் ஹீசைன் பெட்ரோல் நிலையம் மற்றும் மற்றொன்று எதிர் துணை இயக்குநர் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம், கான்பூர்.(2003) II LLJ 341 (All) :***

சக்திதிறன் மூலம் பெட்ரோலியத்தை எடுத்தல் மற்றும் 10 ற்கும் மேற்பட்ட நபர்களை பணிக்கமர்த்துதல் என்பது தொழிற்சாலைகள் சட்டம் 1948 ன் கீழ் 'தயாரிப்பு செய்முறையை' உருவாக்குகிறது என்று நீதிமன்றம் கூறியது.



**2. *In Kumbakonam Milk Society Co-operative Society represented by its Secretary Vs. Regional Director, E.S.I., Corporation, Madras, (2003) III LLJ. 416 (Mad):***

The petitioner society was engaged in purchasing milk from its members and sold the same. The Court held that preserving milk in cold storage is a manufacturing process and hence the society was held a factory.

In deciding whether a particular business involves manufacturing process or not, the circumstances and nature of each case must be considered, but in all manufacturing processes, there must be some transformation to make an article commercially known as another.

**2. *கும்பகோணம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் சார்பாக அதன் செயலாளர் எதிர் மண்டல இயக்குநர் தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகம் சென்னை (2003) III LLJ 416 (Mad):***

மனுதாரரான சங்கம் தனது உறுப்பினர்களிடமிருந்து பாலை வாங்கி, அதை விற்பனை செய்து வந்தது. குளிர்பதனிடும் நிலையத்தில் பாலை சேமித்து வைப்பது ஒரு தயாரிப்பு செய்முறை ஆகும். எனவே சங்கம் ஒரு தொழிற்சாலை ஆகும் என்று நீதிமன்றம் கூறியது.

குறிப்பிட்ட வியாபாரம் உற்பத்தி செய்முறையை கொண்டுள்ளதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு, ஒவ்வொரு நிகழ்வின் சூழ்நிலைகள் மற்றும் தன்மைகளை கருத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அனைத்து தயாரிப்பு செய்முறைகளிலும் பொருள் ஒன்றை வியாபார ரீதியாக மற்றொன்றாக அறியவைக்கும் உருமாற்றம் இருக்க வேண்டும்.

### 3. *New Taj Mahal Cafe Ltd., Mangalore Vs. Inspector of Factories, Mangalore, 1956 Madras 600 (AIR V 43 C 190 Nov.)*

The Madras High Court held, "Mere storage as such will not be part of the manufacturing process as defined by S.2(k), Factories Act of 1948: it will not even amount to treating or adapting any article with a view to its sale or disposal.

"The Preparation of food stuffs in the kitchen for sale in the restaurant would satisfy the test that a manufacturing process was carried on in a part of the premises. If such a manufacturing process is carried on without the aid of any power, the minimum number of workers that would make the premises a factory is 20. But they should all be "workers" as defined by Sec.2(I0), Factories Act of 1948."

### 3. *நியூ தாஜ்மகால் கபே லிமிடெட், மங்களூர் எதிர் தொழிற்சாலைகள் ஆய்வாளர், மங்களூர், 1956 சென்னை 600 (AIR V 43 C 190 நவம்பர்)*

'வெறும் சேமிப்பு மட்டும்' தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 2 (k) யினால் வரையறுக்கப்பட்டுள்ளபடி தயாரிப்புச் செய்முறையின் பகுதியாகாது. இது பொருளொன்றை, அதன் விற்பனை அல்லது ஒப்பளிப்பு குறித்த கருத்துடன் கூட அதைக் கருதுவது, மேற்கொள்வது இயலாது என்று சென்னை உயர்நீதிமன்றம் கூறியது.

உணவுவிடுதியில் விற்பனைக்காக சமையலறையில் உணவுப்பண்டங்கள் தயாரிப்பது 'இருப்பிடத்தின் பகுதி ஒன்றில் தயாரிப்பு முறை செயல்படுத்தப்படுகிறது' என்பதை எடுத்துறைக்கிறது. அத்தகைய தயாரிப்புமுறை எந்தவகை சக்தியின் உதவியில்லாமல்



செயல்படுத்தப்பட்டால் தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை 20 ஆகும். ஆனால் அவர்கள் அனைவரும் தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 2(10) ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி பணியாளர்களாக இருக்கப்படவேண்டும் என்றும் கூறியது.

**(l)** **"Worker"** means a person employed directly or by or through any agency (including a contractor) with or without the knowledge of the principal employer whether for remuneration or not in any manufacturing process, or in cleaning any part of the machinery or premises used for a manufacturing process, or in any other kind of work incidental to, or connected with the manufacturing process, or the subject of the manufacturing process but does not include any member of the armed forces of the Union;

**(1).** **"பணியாளர்"** என்றால் நேரடியாக அல்லது ஒப்பந்ததாரர் உட்பட்ட முகமை எதன் மூலமாக அல்லது முகமையினால் பணியமர்த்தப்பட்டவர்.

இது முதன்மை பணியமர்த்துபவருக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ ஊதியத்துக்காக அல்லது தயாரிப்பு முறையில் இல்லாத அல்லது இயந்திரத்தின் எந்தப் பகுதியையாவது சுத்தப்படுத்துதல் அல்லது தயாரிப்பு முறைக்கு பயன்படுத்தப்பட்ட இருப்பிடங்கள் அல்லது தற்செய் செயலான பணிவகை எதனிலும் அல்லது தயாரிப்பு முறை அல்லது அதன் கருப்பொருளுடன் இணைக்கப்பட்டது. ஆனால் மத்திய அரசாங்கத்தின் இராணுவப் படைப்பிரிவுகளின் உறுப்பினர்கள் எவரையும் சேர்க்காது.

**_CASE LAWS_**

**வழக்கு விதிகள்**

### *1. Rohtas Industries Ltd vs Ramlakhan Singh And Ors 1978 AIR 849, 1978 SCR (3) 93*

Reading **clause (l) of s. 2 of the Factories Act, 1948**, together with clause (k) and (m) thereof, it is clear that a person to be a worker within the meaning of the Factories Act must be a person employed in the premises or the precincts of the factory. [96C]

Raw materials used in the manufacturing process for producing paper and its various products, undoubtedly, will be a "subject of the manufacturing process' within the meaning of clause (1) of section 2 of the Factories Act, whatever also may be or may not be such subject.

### *1. ரோக்டாஸ் இண்டஸ்ட்ரிஸ் லிமிடெட் எதிர் ராம்லக்கன்சிங் மற்றும் மற்றவர்கள் AIR 849, 1978 SLR (3) 93:*

தொழிற்சாலைகள் சட்டம் 1948 பிரிவு 2 ன் சட்டக்கூறு (1) னை சட்டக்கூறு (k) மற்றும் (m) உடன் படித்தால், தொழிற்சாலைகள் சட்டத்தின் அர்த்தத்திற்குள் 'பணியாளராக' இருக்கப்பட வேண்டிய நபர் தொழிற்சாலையின் இருப்பிடம் அல்லது வரையறுக்கப்பட்ட இடத்தில் பணியமர்த்தப்பட்ட நபராக இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது.(96c).

காகிதம் மற்றும் அதன் பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்யும் தாயாரிப்பு முறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் சந்தேகமில்லாமல் தொழிற்சாலைகள் சட்டம் பிரிவு 2 ன் சட்டக்கூறு (1) ன் அர்த்தத்திற்குள் 'தயாரிப்பு முறையின்' கருப்பொருளாகும். இது அத்தகைய பொருளாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் சரி.



### *2. The State of Uttar Pradesh v. M. P. Singh and others:*

The field workers who are employed in guiding supervising and controlling the growth and supply of sugar cane to be used in the factory are not employed either in the precincts of the factory or in the premises of the factory. Sincethey are not workers, the provisions of the Factories Act do not apply to them.

### *2. உத்தரபிரதேச அரசு எதிர் எம்.பி. சிங் மற்றும் மற்றவர்கள்:*

தொழிற்சாலையில் பயன்படுத்தப்பட வேண்டிய கரும்பின் வளர்ச்சி மற்றும் வழங்குதலுக்கு வழிகாட்டுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்துதலில் பணியமர்த்தப்பட்டுள்ள துறைப்பணியாளர்கள் தொழிற்சாலையின் வரையறுக்கப்பட்ட இடம் அல்லது இருப்பிடத்தில் பணியமர்த்தப்பட்டவரில்லை. அவர்கள் 'பணியாளர்கள்' அல்ல என்பதால் தொழிற்சாலைகள் சட்டத்தின் வகையங்கள் அவர்கள் மீது செயல்படாது.

**(m)** **"Factory"** means any premises including the precincts there of-

(i) whereon ten or more workers are working, or were working on any day of the preceding twelve months, and in any part of which a manufacturing process is being carried on with the aid of power, or is ordinarily so carried on, or

(ii) whereon twenty or more workers are working, or were working on any day of the preceding twelve months, and in any part of which a manufacturing process is being carried on without the aid of power, or is ordinarily so carried on,- but does not include a mine subject to the operation of the

Mines Act, 1952 (XXXV of 1952) or a mobile unit belonging to the armed forces of the Union, a railway running shed or a hotel, restaurant or eating place;

**EXPLANATION I.**:

For computing the number of workers for the purposes of this clause all the workers in different groups and relays in a day shall be taken into account;

**EXPLANATION II.:**

For the purposes of this clause, the mere fact that an Electronic Data Processing Unit or a Computer Unit is installed in any premises or part thereof, shall not be construed to make it a factory if no manufacturing process is being carried on in such premises or part thereof ;

**(m) "தொழிற்சாலை"** என்றால் அது உள்ள கட்டிடங்கள் மற்றும் அதன் உள் கட்டமைப்பு:

(i) 10 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரியும் அல்லது முந்தைய 12 மாதங்களில் எந்த நாளிலும் பணிபுரியும் மற்றும் சக்தியின் உதவியுடன் கொண்டு செல்லப்பட்ட அல்லது சாதாரணமாக அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தயாரிப்பு முறையின் பகுதி எதுவும் அல்லது,

(ii) 20 அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்கள் தற்போது பணிபுரியும் அல்லது முந்தைய பன்னிரண்டு மாதங்களில் எந்த நாளிலும் பணிபுரியும் மற்றும் சக்தியின் உதவியில்லாமல் அல்லது சாதாரணமாக அவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தயாரிப்பு முறையின் பகுதி எதுவும்.



ஆனால், இதில் சுரங்கங்கள் சட்டம் 1952 (XXXV of 1952) ன் செயல்பாட்டிற்குட்பட்ட சுரங்கம் அல்லது மத்திய அரசாங்கத்தின் இராணுவப் படைப்பிரிவுகளின் நடமாடும் ஒருமம், இரயில்வே ஓடும் இருப்பிடம், விடுதி, உணவகம், உணவருந்தும் இடம் ஆகியவை உட்படாது:

**விளக்கம் I :**

இந்த சட்டக்கூறிற்கான நோக்கங்களுக்காக பணியாளர்கள் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு நாளொன்றில் பல்வேறு குழுக்கள் மற்றும் தொடர்புகளில் பணியாற்றும் அனைத்து தொழிலாளர்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**விளக்கம் II :**

இந்த சட்டக்கூறின் நோக்கத்திற்காக ஒரு இருப்பிடம் அல்லது அதன் பகுதியில் ஒரு மின்னணு புள்ளிவிபர செயல்முறை ஒருமம் அல்லது ஒரு கனிணி ஒருமம் நிறுவப்படுகிறது என்ற பொருண்மை அதை தொழிற்சாலை ஆக்காது. அங்கு தயாரிப்பு முறை எதுவும் நடந்தால் மட்டுமே தொழிற்சாலை ஆகும்.

***CASE LAWS***

**வழக்கு விதிகள்**

***Bhakra Beas Management Board Vs. Employees' State Insurance Corporation and another, (2003) II LLJ 637 (Del):***

The Court held that the sub stations of the petitioner Electricity Board did not satisfy the definition of factory, since no manufacturing process was carried on in them.

1. There must be **prescribed number of workers** working in any part of the premises and engaging in any part of manufacturing process.

2. The premises constituting a factory may be a building or open land or both. The power used in the premises must be to aid the manufacturing process.

**3. The following establishments have been held to be factories:**

i. Railway workshops

ii. Salt works even on open structures of land

iii. The premises employing seven permanent workmen and three temporary workmen in the manufacturing process using power.

iv. Establishments which prepare food items, drinking items etc., (Hostels)

**4. The following establishments have not been held to be factories:**

i. Railway running sheds.

ii. Exhibition or Cinema theatres.

iii. Construction works.

5. The State Government may, by official notification, declare any establishment as factory, even when the number of workmen is less than the prescribed minimum under the Act.



***பாக்ரா பியஸ் மேலாண்மை வாரியம் எதிர் தொழிலாளர்கள் அரசு காப்பீட்டுக்கழகம் மற்றும் மற்றொன்று (2003) II LLJ 637 (Del):***

மனுதாரரின் மின்வாரியத்தின் துணை நிலையங்கள் தொழிற்சாலை என்ற வரையறையை பூர்த்தி செய்யவில்லை. ஏனென்றால் அதில் தயாரிப்பு செயல்பாடு எதுவும் நடைபெறவில்லை என்று நீதிமன்றம் கூறியது.

1. கட்டிடத்தின் எந்த ஒரு பகுதிக்குள்ளும் குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய தொழிலாளர்கள் பொருட்கள் உற்பத்தி செய்முறையில் ஏதாவது ஒரு வேலையில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

2. தொழிற்சாலையானது ஒரு கட்டிடத்திலோ அல்லது திறந்த வெளியிலோ, அல்லது இரண்டிலுமோ இருக்கலாம். கட்டிடத்திற்குள் உபயோகிக்கப்படும் சக்தியானது பொருட்கள் உற்பத்தி செய்முறைக்கு உதவி புரிவதாக இருக்க வேண்டும்.

**3. கீழ்க்கண்ட நிறுவனங்கள் தொழிற்சாலைகள் என எடுத்துக் கொள்ளப்படும்:**

(i) இரயில்வே ஒர்க்ஷாப் (பணிமனை)

(ii) உப்பு தயாரிப்பு வேலைகள் (திறந்த வெளி உப்பு வயல் உட்பட)

(iii) சக்தியை பயன்படுத்தி பொருட்கள் உற்பத்தி செய்முறை நடைபெறும் கட்டிடத்தில் ஏழு நிரந்தர தொழிலாளிகளையும் மூன்று தற்காலிக தொழிலாளிகளையும் வேலைக்கு அமர்த்தி இருப்பது.

(iv) உணவு வகைகள், பானங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள். (விடுதிகள்)

**4. கீழ்க்கண்ட நிறுவனங்கள் தொழிற்சாலைகள் என்ற பதத்திற்குள் அடங்காது:**

(i) இரயில்வே நடத்துகின்ற உணவு விடுதிகள் அனைத்தும்.

(ii) பொருட்காட்சி அல்லது சினிமா காட்சி அரங்கங்கள்.

(iii) கட்டுமான வேலைகள்.

5. மாநில அரசானது தனது அலுவலக அறிவிப்பின் மூலம் எந்த ஒரு நிறுவனத்தையும் அதில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை, சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த பட்ச எண்ணிக்கைக்கு குறைவாக இருந்தாலும் தொழிற்சாலை என அறிவிக்கலாம்.

**(n) "Occupier"** of a factory means the person, who has ultimate control over the affairs of the factory, Provided that:

(i) in the case of a firm or other association of individuals, any one of the individual partners or members thereof shall be deemed to be the occupier;

(ii) in the case of a company, any one of the directors, shall be deemed to be the occupier;

(iii) in the case of a factory owned or controlled by the Central Government or any State Government, or any local authority, the person or persons appointed to manage the affairs of the factory by the Central Government, the State Government or the local authority, as the case may be, shall be deemed to be the occupier ;



Provided further that in the case of a ship which is being repaired, or on which maintenance work is being carried out, in a dry dock which is available for hire,

(1) the owner of the dock shall be deemed to be the occupier for the purposes of any matter provided for by or under-

(a) section 6, section 7, section 7A, section 7B, section 11 or section 12;

(b) section 17, in so far as it relates to the providing and maintenance of sufficient and suitable lighting in or around the dock;

(c) section 18, section 19, section 42, section 46, section 47 or section 49, in relation to the workers employed on such repair or maintenance.

2. the owner of the ship or his agent or master or other officer-in-charge of the ship or any person who contracts with such owner, agent or master or other officer-in-charge to carry out the repair or maintenance work shall be deemed to be the occupier for the purposes of any matter provided for by or under section 13, section 14, section 16 or section 17 (save as otherwise provided in this proviso) or Chapter IV (except section 27) or section 43, section 44 or section 45, Chapter VI, Chapter VII, Chapter VIII or Chapter IX or section 108, section 109 or section 110, in relation to-

(a) the workers employed directly by him or by or through any agency; and

(b) the machinery, plant or premises in use for the purpose of carrying out such repair or maintenance work by such owner, agent, master or other officer-in-charge or person ;

**(n) 'தொழிற்சாலையின் பற்றுடமையர்'** என்றால் தொழிற்சாலையின் விவகாரங்கள் மீமு முழுமையான இறுதியான கட்டுப்பாடு கொண்ட நபராவார். இது பின்வரும் வகையில் கருதப்படும்:—

(i) நிறுமம் அல்லது தனி நபர்கள் அமைப்பில் தனிநபர் கூட்டாளிகள் அல்லது உறுப்பினர்களில் ஒருவர் பற்றுடமையராகக் கருதப்பட வேண்டும்.

(ii) ஒரு நிறுவனத்தைப் பொறுத்தவரை இயக்குநர்களில் ஒருவர் பற்றுடமையராகக் கருதப்பட வேண்டும்.

(iii) மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் அல்லது உள்ளாட்சி ஆள்வைக்குச் சொந்தமான அல்லது கட்டுப்படுத்தப்பட்ட தொழிற்சாலையைப் பொறுத்தவரை தொழிற்சாலையின் விவகாரங்களை நிர்வகிப்பதற்கு மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கம் அல்லது உள்ளூர் ஆள்வையினால் நியமிக்கப்பட்ட நபர் அல்லது நபர்கள் பற்றுடமையராகக் கருதப்பட வேண்டும்.

வாடகைக்குக் கிடைக்கும் கப்பல் கட்டுமான தளத்தில் கப்பலொன்று பழுதுபார்க்கப்படுகிறது அல்லது அனைத்து இடமும் சரி செய்யப்படுகிறது.

(1) பின்வரும் இந்தப் பிரிவுகளின்கீழ் அல்லது பிரிவுகளினால் வழங்கப்பட்ட பொருட்கூறின் நோக்கங்களுக்காக கப்பல் கட்டுமானத்தின் உரிமையாளர் பற்றுடமையராகக் கொள்ளப்பட வேண்டும்.



(a) பிரிவு 6, 7, 7A, 7B, 11 அல்லது 12.

(b) பிரிவு 17. இது கப்பல் கட்டுமான தளத்தில் அல்லது அதைச் சுற்றிப் போதுமான மற்றும் உரிய ஒளி வழங்குதல் மற்றும் பராமரித்தலுக்காகும்.

(c) பிரிவு 18, 19, 42, 46, 47, அல்லது 49. இது அத்தகைய பழுதுபார்த்தல் அல்லது பராமரித்தலுக்குப் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் தொடர்பானதாகும்.

2. கப்பல் உரிமையாளர் அல்லது அவரது முகவர் அல்லது முதல்வர் அல்லது கப்பலின் பொறுப்பு அலுவலர் அல்லது அத்தகைய பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புப்பணி மேற்கொள்வதற்காக அந்த உரிமையாளர், முகவர், முதல்வர் அல்லது இதர பொறுப்பு அலுவலருடன் ஒப்பந்தம் செய்யும் நபர் பற்றுடமையராக கருதப்பட வேண்டும்.

இது பின்வரும் பிரிவுகளில் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட பொருட்கூறின் நோக்கங்களுக்காகும்.

பிரிவு 13, 14, 16, 17 (இந்த விலக்கு வாசகத்தில் வழங்கப்பட்ட வேறுவகையில் பாதுகாத்தல்) அல்லது இயல் IV (பிரிவு 27 தவிர) அல்லது பிரிவு 43, 44, 45, இயல் VI, VII, VIII அல்லது இயல் IX அல்லது பிரிவு 108, 109, 110 ஆகும். இவை பின்வருவனவற்றிற்காகும்.

(a) அவரால் நேரடியாக அல்லது முகமையினால் அல்லது அதன்மூலம் பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் மற்றும்,

(b) அத்தகைய உரிமையாளர், முகவர், முதல்வர், இதர பொறுப்பு அலுவலர் அல்லது நபரினால் அத்தகைய பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்புப் பணி செய்வதற்காக பயன்படுத்தப்படும் இயந்திரம், தொழிற்கூடம் அல்லது இருப்பிடங்கள்:

## *CASE LAWS*
## வழக்கு விதிகள்

### i. *Kirloskar Pneumatic Co. Ltd. Vs. V.A. More and others, (1993) I LLJ 805 (Bom):*

The Court held that an occupier need not necessarily be a Director of the Company. Any person who had ultimate control over the affairs of factory can be nominated as occupier.

### i. *கிர்லோஸ்கர் நியுமாடிக் கம்பெனி லிட். எதிர் V.A. மோரே மற்றும் மற்றவர்கள் (1993) I LLJ 805 (Bom):*

பற்றுடமையாளர் ஒருவர் நிறுவனத்தின் இயக்குநராக இருக்க வேண்டிய அவசியமில்லை. தொழிற்சாலை விவகாரங்களின் மீது இறுதிக் கட்டுப்பாட்டை கொண்டுள்ள நபர் அதன் பற்றுடமையாளராக நியமிக்கப்படமுடியும் என்று நீதிமன்றம் கூறியது.

### ii. *J.C. Mills Ltd. And Ors. vs Payment Of Wages Inspector And ... (2000) ILLJ 47 MP*

### *J.K. Industries Ltd. and Ors. v. Chief Inspector of Factories & Boilers and Ors. (supra).*

In defining the factory, the Apex Court observed in para 26 as below: -

"Thus, we find that after the 1987 amendment, the true import of provison (ii) to Section 2(n) would be that in the case of a company, which owns the factory, the company cannot nominate any one of its employees or officers, except a director of the company, as the occupier of the factory.



In other words, an occupier of the factory in the case of a company must necessarily be any one of its directors who shall be so notified for the purposes of the Factories Act, Such an occupier cannot be any other employee of the company or the factory. This interpretation of an 'occupier' would apply to all provisions of the Act, wherever the expression occupier is used and not merely for the purposes of Section 7 or 7A of the Act."

It was further observed in para 44 that:

"As already noticed, where the company owns a factory it is the company which is the occupier, but, since company is a legal abstraction without a real mind of its own, it is those who in fact control and determine the management of the company, who are held vicariously liable for commission of statutory offences. The directors of the company, are therefore, rightly called upon to answer the charge being the directing mind of the company."

Ultimately in para 62, the Apex Court laid down the law on the subject in the following terms:

1. In the case of a company, which owns a factory, it is only one of the directors of the company who can be notified as the occupier of the factory for the purposes of the Act and the company cannot nominate any other employee to be the occupier of the factory.

   Where the company fails to nominate one of its directors as the occupier of the factory, the Inspector of Factories shall be at liberty to proceed against any one of the directors of the company treating him as deemed occupier of the

factory, for prosecution and punishment in case of any breach or contravention of the provisions of the Act for offences committed under the Act.

Provison (ii) to Section 2(n) of the Act is intra vires the substantive provision of Section 2(n) of the Act. Proviso (ii) to Section 2(n) is constitutionally valid and is not ultra vires Articles 14, 19(1)(g) and 21 of the Constitution of India.

***ii. ஜே. சி. மில் லிமிடெட் மற்றும் மற்றவர்கள் எதிர் ஊதியங்கள் வழங்குதல் ஆய்வாளர் மற்றும் ......... (2000) ILLT 47 MP:***

***ஜே.கே. இண்டஸ்ட்ரிஸ் லிமிடெட் மற்றும் மற்றவர்கள் எதிர் தொழிற்சாலைகள் மற்றும் கொதிகலன்கள் தலைமை ஆய்வாளர் மற்றும் மற்றவர்கள்.(சுப்ரா):***

தொழிற்சாலை குறித்து உயர்வு நீதிமன்றம் பாரா 26 ல் பின்வருமாறு கூறுகிறது:—

1987 வது திருத்தத்திற்குப் பிறகு பிரிவு 2(n) ற்கான வரம்புரை (ii) ன் உண்மையான அர்த்தம் என்னவென்றால் ‘தொழிற்சாலையை உரிமை கொண்டுள்ள நிறுவனம்’ தன்னுடைய இயக்குநர் தவிர, பணியாளர்கள் அல்லது அதிகாரிகளில் ஒருவரை தொழிற்சாலையின் பற்றுடமையராக நியமிக்க முடியாது என்று அறிகிறோம்.

வேறுவகையில் கூறினால், நிறுவனத்தைப் பொறுத்தவரை ‘தொழிற்சாலையின் பற்றுடமையர்’ நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவராக இருக்கவேண்டும். தொழிற்சாலைகள் சட்டத்தின் நோக்கங்களுக்காக அவர் அறிவிக்கப்பட வேண்டும்.



அத்தகைய பற்றுடமையர் நிறுவனம் அல்லது தொழிற்சாலையின் வேறு பணியாளராக இருக்கப்பட முடியாது. ‘பற்றுடமையரின் பொருள் விளக்கம்’ சட்டத்தின் அனைத்து வகையங்களுக்கும் செயல்படும். மேலும் ‘பற்றுடமையர்’ என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படும் எல்லா இடங்களில் பொருந்தும். சட்டத்தின் பிரிவு 7 அல்லது 7 A ன் நோக்கங்களுக்கு மட்டுமல்லாது.

பாரா 44 ல் பின்வருமாறு மேலும் கூறப்படுகிறது. ஏற்கனவே அறிந்தபடி தொழிற்சாலை ஒன்றை உரிமை கொண்டுள்ள நிறுவனம் என்பதில் ‘நிறுவனம் பற்றுடமையர்’ஆகும். ஆனால் நிறுவனமானது தனக்கென சொந்தமான உண்மையான மனதில்லாத சட்டச்சுருக்கம் என்பதால், நிறுவனத்தினைக் கட்டுப்படுத்தி நிர்வாகத்தை தீர்மானிப்பவர்களே சட்டப்படியான குற்றங்களுக்கு பகரப் பொறுப்படைவு உள்ளதாகக் கருதப்படுவார்கள்.

ஆகவே நிறுவனத்தின் நெறியுறுத்தும் எண்ணம் உள்ள இயக்குநர்கள் குற்றச்சாட்டிற்கு பதிலளிக்க அழைக்கப்படுகிறார்கள்.

இறுதியாக பாரா 62 ல் பொருட்கூறு மீது சட்டத்தை பின்வரும் கூறுகளில் உயர்வு நீதிமன்றம் முன்வைத்தது:

1. தொழிற்சாலை ஒன்றை உடமை கொண்டுள்ள நிறுவனம் சட்டத்தின் நோக்கங்களுக்காக அதன் இயக்குநர்களில் ஒருவரை மட்டுமே தொழிற்சாலையின் பற்றுடமையராக நியமிக்க முடியுமே தவிர, பணியாளர் எவரையும் நியமிக்கமுடியாது.

   நிறுவனம் அதன் தொழிற்சாலையின் பற்றுடமையராத அதன் இயக்குநர்களில் ஒருவரை நியமிக்கத் தவறும்போது, சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட குற்றங்களுக்காக சட்டத்தின் வகையங்களின் மீறுகை அல்லது மாற்றாக செயல்பட்டதற்கு குற்றவழக்கீடு

மற்றும் தண்டனைக்காக நிறுவனத்தின் இயக்குநர்களில் ஒருவரை தொழிற்சாலையின் கருதப்பட்ட பற்றுடமையராகக் கருதி, அவர்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தொழிற்சாலைகள் ஆய்வாளருக்கு தன்னுரிமை இருக்கப்பட வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 2 (n) ற்கான வரம்புரை (ii) சட்டத்தின் பிரிவு 2(n) ன் நிலைமுறை வகையத்தின் அதிகார வரம்பிற்குட்பட்டது. பிரிவு 2(n) ற்கான வரம்புரை(ii) அரசியலமைப்புப்படி செல்லத்தக்கது மற்றும் இந்திய அரசியலமைப்பின் சரத்துகள் 14,19(1) (g) மற்றும் 21 ன் அதிகாரவரம்பிகற்றதல்ல.

**(o)** **[Omitted]**

**(o)** **விடுவிக்கப்பட்டது,**

**(p)** **"prescribed"** means prescribed by rules made by the State Government under this Act;

**(p).** **'குறித்த'** என்றால் இந்த சட்டத்தின்கீழ் மாநில அரசாங்கத்தினால் செய்யப்பட்ட விதிகளினால் குறிக்கப்பட்டது எனப்படும்.

**(q)** **[Omitted];**

**(q).** **விடுவிக்கப்பட்டது.**

**(r)** where work of the same kind is carried out by two or more sets of workers working during different periods of the day, each of such sets is called a "group" or "relay" and each of such periods is called a "shift".



**(r)** ஒரே வகையான வேலை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களால் நாளின் வேறு வேறு காலத்தில் செய்யப்படும்போது அத்தகைய வகையினர் குழு என்றும், அத்தகைய காலங்கள் ஷிப்ட் என்றும் அழைக்கப்படுகிறது.

**SECTION 3. REFERENCE TO TIME OF DAY.-**

In this Act references to time of day are references to Indian Standard Time being five and a half hours, ahead of Greenwich Mean Time:

Provided that for any area in which Indian Standard Time is not ordinarily observed the State Government may make rules-

a. specifying the area,

b. defining the local mean time ordinarily observed therein, and

c. permitting such time to be observed in all or any ofthe factories situated in the area.

**பிரிவு: 3. நாளின் காலத்திற்கான குறிப்பீடு:**

இந்த சட்டத்தில் நாளின் காலக்குறியீடுகளானது கிரீன்விச் நிலையான நேரக் குறிப்பிலிருந்து 5½ மணி நேரங்கள் முன்னர் உள்ள இந்திய நிலையான நேரத்தின் குறியீடுகளாகும்.

இதில் இடவரை எதிலும் இந்திய நிலைநேரம் சாதாரணமாகக் கணிக்கப்படவில்லை என்றால் மாநில அரசாங்கம் பின்வரும் விதிகளை செய்யலாம்:—

அ. இடத்தைக் குறிப்பிடுதல்.

ஆ. சாதாரணமாகக் கணிக்கப்படும் உள்ளூர் நிலைநேரத்தை வரையறுத்தல்.

இ. இடவரையில் உள்ள அனைத்து தொழிற்சாலைகள் அல்லது வேறு தொழிற்சாலைகளில் கருதப்பட வேண்டிய அந்த நேரத்தை அனுமதித்தல்.

**SECTION 4. POWER TO DECLARE DIFFERENT DEPARTMENTS TO BE SEPARATE FACTORIES OR TWO OR MORE FACTORIES TO BE A SINGLE FACTORY:-**

The State Government may, on its own or on an application made in this behalf by an occupier, direct by an order in writing and subject to such conditions as it may deem fit, that for all or any of the purposes of this Act different departments or branches of a factory of the occupier specified in the application shall be treated as separate factories or that two or more factories of the occupier specified in the application shall be treated as a single factory.

Provided that no order under this section shall be made bythe State Government on its own motion unless an opportunity of being heard is given to the occupier.

**பிரிவு: 4. வேறு வேறு துறைகளை தனிப்பட்ட தொழிற்சாலைகளாக அறிவித்தல், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்சாலைகளை ஒரே தொழிற்சாலையாக அறிவித்தலுக்கு அதிகாரம்:**

மாநில அரசாங்கம் தனது சொந்த அல்லது இதுசார்பாக பற்றுடமையரால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது எழுத்து மூலமான



ஆணை மூலம் மற்றும் சரியானதென்று கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு பின்வருவனவற்றிற்காக ஏவுரை செய்யலாம். இந்த சட்டத்தின் அனைத்து அல்லது ஏதாவதொரு நோக்கங்களுக்காக விண்ணப்பத்தில் குறிக்கப்பட்ட பற்றுடமையாளரின் தொழிற்சாலையின் வேறு வேறு துறைகள் அல்லது கிளைகள் தனிப்பட்ட தொழிற்சாலைகளாகக் கருதப்பட வேண்டும் அல்லது அவரது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் ஒரே தொழிற்சாலையாகக் கருதப்பட வேண்டும்.

பற்றுடமையருக்கு கேட்பிற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டாலன்றி மாநில அரசாங்கத்தால் அதன் சொத்து தீர்மானத்தில் இந்தப் பிரிவின்கீழ் ஆணை எதுவும் செய்யப்பட வேண்டாம்.

**SECTION 5. POWER TO EXEMPT DURING PUBLIC EMERGENCY:**

In any case of a public emergency the State Government may, by notification in the Official Gazette, exempt any factory or class or description of factories from all or any of the provisions of this Act except section 67 for such period and subject to such conditions as it may think fit:

Provided that no such notification shall be made for a period exceeding three months at a time.

**EXPLANATION I.**:

For the purposes of this section ‘public emergency’ means a grave emergency whereby the security of India or of any part of the territory thereof is threatened, whether by war or external aggression or internal disturbance.

**பிரிவு:5. பொது நெருக்கடி நிலையின்போது விலக்குவதற்கான சக்தி:**

பொது நெருக்கடி நிலையின்போது மாநில அரசாங்கம் அரசிதழில் வெளியிடுவதன் மூலம் பிரிவு 67 தவிர அத்தகைய

கால அளவு மற்றும் அது உரியதென்று கருதக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்த சட்டத்தின் அனைத்து வகையங்கள் அல்லது ஏதாவதொரு வகையத்திற்குட்பட்டு ஒரு தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைகளின் வகை அல்லது விளக்கத்திற்கு விலக்கு அளிக்கலாம்.

ஆனால் ஒரே நேரத்தில் மூன்று மாதங்களை மீறும் கால அளவிற்கு அத்தகைய அறிவிப்பு செய்யப்படாதிருக்க வேண்டும்.

**விளக்கம் :**

இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக பொது நெருக்கடி நிலை என்றால் கடும் நெருக்கடி நிலை ஆகும். இதில் இந்தியாவின் பாதுகாப்பு அல்லது நிலப்பரப்பின் பகுதி எதுவும் போர் அல்லது வெளிநாட்டு தாக்குதல் அல்லது உள்நாட்டுக் குழப்பத்தால் அச்சுறுத்தப்படுதல் ஆகும்.

**SECTION 6. APPROVAL, LICENSING AND REGISTRATION OF FACTORIES.-**

1. The State Government may make rules-

(a) requiring for the purposes of this Act, the submission of plans of any class or description of factories to the Chief Inspector or the State Government;

(aa) requiring the previous permission in writing of the State Government or the Chief Inspector to be obtained for the site on which the factory is to be situated and for the construction or extension of any factory or class or description of factories;



(b) requiring for the purpose of considering applications for such permission the submission of plans and specifications;

(c) prescribing the nature of such plans and specifications and by whom they shall be certified;

(d) requiring the registration and licensing offactories, or any class or description of factories, and prescribing the fees payable for such registration and licensing and for the renewal of licences;

(e) requiring that no licence shall be granted or renewed unless the notice specified in section 7 has been given.

2. If on an application for permission referred to in clause (aa) of sub-section (1) accompanied by the plans and specifications required by the rules made under clause (b) of that sub-section, sent to the State Government or Chief Inspector by registered post, no order is communicated to the applicant within three months from the date on which it is so sent, the permission applied for in the said application shall be deemed to have been granted.

3. Where a State Government or a Chief Inspector refuses to grant permission to the site, construction or extension of a factory or to the registration and licensing of a factory, the applicant may within thirty days from the date of such refusal, appeal to the Central Government if the decision appealed for was of the State Government, and to the State Government in any other case.

**EXPLANATION I.**:

A factory shall not be deemed to be extended within the meaning of this section by reason only of the replacement of any plant or machinery, or within such limits as may be prescribed, of the addition of any plant or machinery, if such replacement or addition does not reduce the minimum clear space required for safe working around the plant or machinery or adversely affect the environment conditions from the evolution or emission of steam, heat or dust or Iumes which are injurious to health.

**பிரிவு: 6. தொழிற்சாலைகளை ஏற்றுக் கொள்ளுதல், உரிமம் வழங்குதல் மற்றும் பதிவு செய்தல்:**

1. பின்வருவனவற்றிற்காக மத்திய அரசாங்கம் விதிகள் செய்யலாம்.

(a) இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக தொழிற்சாலைகளின் வகை அல்லது விளக்கத்தின் திட்டங்களை தலைமை ஆய்வாளர் அல்லது மாநில அரசாங்கத்திடம் சமர்ப்பித்தல்;

(aa) தொழிற்சாலை நிறுவப்பட வேண்டிய இடத்திற்காக மற்றும் தொழிற்சாலை அல்லது தொழிற்சாலைகளின் வகை அல்லது விளக்கங்களின் கட்டுமானம் அல்லது நீட்டிப்பிற்கு மாநில அரசாங்கம் அல்லது தலைமை ஆய்வாளரிடமிருந்து பெறப்பட வேண்டிய முன் அனுமதியை எழுத்து மூலம் கோருதல்;

(b) அத்தகைய அனுமதிக்காக விண்ணப்பங்களைக் கருதும் நோக்கத்திற்காக திட்டங்கள் மற்றும் குறித்த வகை விளக்கங்களை வேண்டுதல்;



(c) அத்தகைய திட்டங்கள் மற்றும் விளக்க விபரங்களின் தன்மைகளை வரையறுத்தல் மற்றும் அவை யாரால் சான்றளிக்கப்பட வேண்டும் என்பதை வரையறுத்தல்;

(d) தொழிற்சாலைகளின் பதிவு மற்றும் உரிமத்தை அல்லது தொழிற்சாலைகளின் வகை அல்லது விளக்கத்தை வேண்டுதல் மற்றும் அதற்கும் உரிமங்களைப் புதுப்பித்தலுக்குமான கட்டணங்களை வரையறுத்தல்;

(e) பிரிவு 7ன் கீழ் குறிக்கப்பட்ட அறிவிப்பு வழங்கப்பட்டாலன்றி, உரிமம் எதுவும் வழங்கப்பட வேண்டாம் அல்லது புதுப்பிக்கப்பட வேண்டாம் என்று கோருதல்.

2. துணைப்பிரிவு (1)ன் சட்டக்கூறு (aa)ல் மற்றும் சட்டக்கூறு (b)ன் கீழ் செய்யப்பட்ட விதிகளால் கோரப்பட்ட திட்டங்கள் மற்றும் விளக்க விபரங்கள் இணைந்த அனுமதிக்கான விண்ணப்பம் மாநில அரசாங்கம் அல்லது தலைமை ஆய்வாளருக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படுகிறது. அது அனுப்பப்பட்ட தேதியிலிருந்து, 3 மாத காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு ஆணை எதுவும் அனுப்பப்படவில்லை என்றால், அந்த விண்ணப்பத்தின் மூலம் கேட்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கொள்ளப்பட வேண்டும்.

3. தொழிற்சாலைக்கான இடம், கட்டுமானம் அல்லது விஸ்தரிப்பு அல்லது தொழிற்சாலைப் பதிவு அல்லது உரிமத்திற்கு அனுமதி வழங்குவதற்கும், மாநில அரசாங்கம் அல்லது தலைமை ஆய்வாளர் மறுத்தால், அவ்வாறு மறுக்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரர் மத்திய அரசாங்கத்திடம் மேல்முறையீடு செய்யலாம்.

இது மேல்முறையீடு செய்யப்பட்ட தீர்மானம் மாநில அரசாங்கத்தினுடையதாக, மற்றும் வேறு வழக்கு எதிலும் மாநில அரசாங்த்திற்கென்றால் செய்யலாம்.

**விளக்கம் :**

குறிப்பிட்ட வரம்பிற்குள், கருவி அல்லது இயந்திரத்தை மாற்றுதல் அல்லது கருவி அல்லது இயந்திரத்தைச் சேர்த்தல் ஆகியவை, கருவி அல்லது இயந்திரத்தைச் சுற்றிப் பாதுகாப்பாக வேலை செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச இடரற்ற இடத்தைக் குறைக்கவில்லை என்றாலும் அல்லது நீராவி, வெப்பம், தூசு அல்லது புகை போன்ற உடல்நலத்திற்குத் தீங்கானவை வெளிப்படுதலால் சுற்றுச்சூழலைக் கடுமையாக பாதிக்கவில்லை என்றாலும் இந்தப்பிரிவின் அர்த்தத்திற்குள் 'தொழிற்சாலை ஒன்று நீட்டிக்கப்பட்டதாக' கருதப்படமாட்டாது.

**SECTION 7. NOTICE BY OCCUPIER:**

(1) The occupier shall, at least fifteen days before he begins to occupy or, use any premises as a factory, send to the Chief Inspector a written notice containing-

(a) the name and situation of the factory;

(b) the name and address of the occupier;

(bb) the name and address of the owner of the premises or building (including the precincts there of) referred to in section 93;

(c) the address io which communication relating to the factory may be sent;

(d) the nature of the manufacturing process-

(i) carried on in the factory during the last twelve months in the case offactories in existence on the date of the commencement of this Act, and



(ii) to be carried on in the factory during the next twelve months in the case of all factories;

(e) the total rated horse power installed or to be installed in the factory, which shall not include the rated horsc power of any separate standby plant;

(f) the name of the rnanager of the factory for the purposes of this Act;

(g) the number of workers likely to be employed in the factory;

(h) the average number of workers per day employed during the last twelve months in the case of a factory in existence on the date of the commencement of this Act;

(i) such other particulars as may be prescribed.

(2) In respect of all establishments, which come within the scope of the Act for the first time the occupier shall send a written notice to the Chief Inspector containing the particulars specified in sub-section (1) within thirty days from the date of the commencement of this Act.

(3) Before a factory engaged in a manufacturing process which is ordinarily carried out for less than one hundred and eighty working days in the year, resumes working, thc occupier shall send a written notice to the Chief Inspector containing the particulars specified in sub-section (1) that least thirty days before the date of the commencement of work.

(4) Whenever a new manager is appointed, the cccupies shall send to the Inspector a written notice and to the Chief Inspector a copy thereof within seven days from the date on which such person takes over charge.

(5) During a period for which no person has been designated as manager of a factory or during which the person designated does not manage the factory, any person found acting as manager, or if no such person is found, the occupier himself, shall be deemed to be the manager of the factory for the purposes of this Act.

**பிரிவு: 7. பற்றுடமையரால் அறிவிப்பு:**

(1) பற்றுடமையர் தொழிற்சாலை ஒன்றின் இடமொன்றை ஆக்ரமிக்க அல்லது பயன்படுத்தத் தொடங்குவதற்கு குறைந்தபட்சம் 15 நாட்களுக்கு முன் தலைமை ஆய்வாளருக்கு பின்வரும் விபரங்களடங்கிய எழுதப்பட்ட அறிவிப்பை அனுப்ப வேண்டும்.

(a) தொழிற்சாலையின் பெயர் மற்றும் இருப்பிடம்;

(b) பற்றுடமையரின் பெயர் மற்றும் விலாசம்;

(bb) பிரிவு 93ல் குறிப்பிடப்படுள்ள இருப்பிடங்கள் அல்லது கட்டிட (உள்கட்டமைப்பு உள்பட)த்தின் உரிமையாளரின் பெயர் மற்றும் விலாசம;

(c) தொழிற்சாலை தொடர்பான தகவல் அனுப்பப்படக்கூடிய விலாசம்;

(d) தயாரிப்பு முறையின் தன்மை;

(i) இந்த சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றிலிருந்து அதற்கு முந்தைய 12 மாதங்களில் நடைமுறையிலிருந்த தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தயாரிப்பு முறையின் தன்மை;

(ii) அனைத்து தொழிற்சாலைகளிலும் அடுத்த 12 மாதங்களுக்கு தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய தயாரிப்பு முறையின் தன்மை;



(e). தொழிற்சாலையில் நிறுவப்பட்ட அல்லது நிறுவப்பட வேண்டிய மொத்தவிகித குதிரை சக்தியில் வேறு தனி துணைக்கருவியின் விகித குதிரைசக்தி சேர்க்கப்பட வேண்டாம்;

(f). இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக தொழிற்சாலை மேலாளரின் பெயர்;

(g). தொழிற்சாலையில் பணியமர்த்தப்பட இருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை;

(h). இந்த சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்று நடைமுறையிலிருந்த தொழிற்சாலையில் முந்தைய 12 மாதங்களில் நாளொன்றுக்கு பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் சராசரி எண்ணிக்கை;

(i) குறிப்பிடக்கூடிய இதர விபரங்கள்;

(2) சட்டத்தின் நோக்கெல்லைக்குள் வரும் அனைத்து நிறுவனங்களைப் பொறுத்தவரை இந்த சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் துணைப்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பற்றுடமையர் தலைமை ஆய்வாளருக்கு எழுத்துமூல அறிவிப்பாக அனுப்ப வேண்டும்.

(3) வருடத்தில் 180 நாட்களுக்கும் குறைவாக சாதாரணமாக செயல்பட்டிருந்த தயாரிப்பு முறையில் ஈடுபட்ட தொழிற்சாலை மீண்டும் வேலை தொடங்கினால் பணி தொடங்கப்பட்ட தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் துணைப்பிரிவு (1)ல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பற்றுடமையர் தலைமை ஆய்வாளருக்கு எழுத்துமூல அறிவிப்பாக அனுப்ப வேண்டும்.

(4) புது மேலாளர் நியமிக்கப்படும் போது அந்த நபர் பொறுப்பேற்றுக் கொண்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் பற்றுடமையர்

ஆய்வாளருக்கு எழுத்துமூல அறிக்கையும் தலைமை ஆய்வாளருக்கு அதன் நகலும் அனுப்ப வேண்டும்.

5. தொழிற்சாலை ஒன்றின் மேலாளராக நபர் எவரும் நியமிக்கப்படாத காலகட்டத்தில் அல்லது நியமிக்கப்பட்ட நபர் தொழிற்சாலையை நிர்வகிக்காத காலகட்டத்தில் மேலாளராக செயல்படும் நபர் அல்லது அவ்வாறு நபர் எவரும் இல்லையென்றால் இந்த சட்டத்தின் நோக்கங்களுக்காக தொழிற்சாலையில் மேலாளராக பற்றுடமையரே கருதப்பட வேண்டும்.